## செப்டம்பர் - 2

**"ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால் சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூறுங்கள்." - 1பேது 1 : 22**

சபையிலே அறிவு உயர்வாக மதிக்கப்பட வேண்டும். அது முன்னேற்றத்திற்குச் சான்றாகக் கருதப்பட வேண்டும். ஏனென்றால், ஒருவர் அறிவில் வளர்ந்தாலொழிய, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் கிருபையிலும் வளர முடியாது. கர்த்தருக்காகவும் சத்தியத்திற்காகவும் உள்ள யாருடைய அன்பு அவருடைய வார்த்தையைப் படிப்பதில் அவர்களுடைய ஆர்வத்தினால் சாட்சியாகக் காட்டப்படுகிறதோ யாருக்குத் தேவனோடு அவர்களுக்கிருக்கிற தயவு, அவர்கள் அதிகதிகமாகத் தேவனின் ஆழமான காரியங்களில் வழி நடத்தப்படுகிறதிலிருந்து சாட்சியாகக் காட்டப்படுகிறதோ அவர்களை நாம் தகுந்த விதமாக உயர்வாக மதிக்கிறோம். ஆனாலும், பூலோகக் குடும்பத்தில் குழந்தைகளையும் பூரண வளர்ச்சியில்லாதவர்களையும் நாம் நேசித்து அவர்களுக்காகக் கவலைப்படுகிறது போல, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் அவர்களை வளரத்தக்கதாக விசுவாச வீட்டிலுள்ள சிறியவர்களையும் வளர்ச்சியில் குன்றியவர்களையும் கவனிக்கவும், நேசிக்கவும், அவர்களுக்கு உதவி செய்யவும் வேண்டும். **- Z '03, 207 (R 3219)**

நாம் சத்தியத்தை ஆவியின் மூலமாக பெற்றுக்கொள்ளும் பொழுதெல்லாம் அதற்குக் கீழ்ப்படிகிறோம். கீழ்ப்படியும் பொழுதெல்லாம் பாவம், வஞ்சகம், சுயநலம், உலகத்தனம் இவைகளை சத்தியம் நம்முடைய மனதிலிருந்தும், இருதயத்திலிருந்தும் நீக்கிச் சுத்திகரிக்கிறது. இதைவிட அதிகமாகவும் செய்கிறது. எல்லா நல்லெண்ணத்திலும், குணத்திலும், வார்த்தையிலும், கிரியையிலும் அது நம்மைக் கட்டுவிக்கிறது. தனக்கும், உலகத்துக்கும் மரித்து தேவனுக்கென்று பிழைத்திருக்கவும், அறிவில் வளரவும் விழிப்புள்ளவர்களாயிருக்கவும், ஜெபம் செய்யவும், ஊழியம் செய்யவும், குணவிருத்தியடையவும், தீமையை சகிக்கவும் அது நம்மைத் தூண்டுகிறது. விசேஷமாக தேவனுக்கும், மனிதனுக்குமுள்ள அன்பினால் இருதயத்தை நிரப்பி, கடமை அன்பையும், தன்னலமற்ற அன்பையும் கிறிஸ்துவுக்குள் இருக்கிற சகோதரருக்கு அளிக்க நம்மை சாத்தியமாக்குகிறது. **- P '26, 125.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**அப் 15:9; 2கொரி 7:1; யோவா 17:17; 15:3,12,17; எபே 5:2; 1தெச 4:9; 1யோவா 2:9,10; 3:11,23; 4:21; ரோம 12:9,10; 1தீமோ 1:5; எபி 13:1; 1பேது 2:17; 3:8; 4:8.**

**கோபுர வாசிப்பு : Z '11, 57 (R 4766).**

**வினாக்கள் : சகோதரர் மீதுள்ள கடமை அன்புக்கும் பிரதிபலன் நோக்கா அன்புக்கும், வசனத்தின் சுத்திகரிக்கும் வல்லமைக்கும் எடுத்துக்காட்டாகச் சிறந்து விளங்கிய இந்தவார அனுபவங்கள் எவை? அவற்றிலுள்ள வெற்றிகள் தோல்விகள் எவ்வளவு? அதனால் படித்த பாடங்கள் எவை?**